மத்திய அரசின் உதவியோடு 'Integrated child Developement scheme' என்ற திட்டத்தை நாம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா? இதுவரைக்கும் எத்தனை யூனியன் களிலே இந்தத் திட்டம் அமுலாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த 3, 4 ஆண்டுகளிலே நிறைவேற்றுகிற வகையிலே, திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், இரண்டாண்டுகளுக்குள்ளேயே முடிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். 1991-92-இல் மதுரை, திண்டுக்கல், அண்ணா, சேலம், பெரியார் மாவட்டங்களில் துவக்கப்பட்டிருக்கிறது. 1992–93 இல் தர்மபுரி, தென்னாற்காடு, இராமநாதபுரம், பசும்பொன், காமராஜர் ஆகிய மாவட்டங்களில் நிறைவேற்றப்பட உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி பீட்ரிக் டிசோசா

Dr. BEATRIDH D. SOUZA: Hon Speaker Sir, my question is relevant. I would like to know whether the Government has taken steps to improve the child care centre in the Secretariate. I have visited it. That is a deplorable condition.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டையில் இருக்கிற அந்த குழந்தைகள் காப்பகம், இரண்டாண்டு கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அவ்வாறு சீர்கெட்ட நிலைமைக்குப் போயிற்று. இப்போது தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 677, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

சத்துணவுக்கூடம் அமைத்தல்

*7783—செல்வி கோ. மல்லிகா ;
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தில் புவனகிரி பேரூராட்சியில் 7-வார்டு கள்ளிக்காட்டு காலனிக்கு சத்துணவுக்கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

1992 மே 5]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அரசு, கட்டித் தருவதற்கு ஆவன செய்யும்.

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு விட்டதா? இந்த நிதியாண்டிலேயே சத்துணவுக் கூடங்களுக்கு கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி பேரூராட்சி, ஏழாவது வார்டு, கள்ளிக்காட்டு காலனிக்கு 1992-93 நிதியாண்டில் புதியக் கட்டிடம் கட்டுவதற்குரிய ஆய்வுகளைச் செய்து, தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 678. திரு. எம். பெரியவீரன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

சத்துணவுக் கூடங்கள் புதுப்பித்தல்

678

*8835—திரு. எம். பெரியவீரன் :

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) பெரியகுளம் தொகுதி முதல்வர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் நடைபெறும் கட்டிடங்கள் புதுப் பிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தொண்டுள்ளம் படைத்த தொழில் அதிபர்கள் மற்றும் நிறுவனங்கள் மூலம் சத்துணவு மையக் கட்டிடங்களைப் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, நடைபெற்று வருகின்றது. 1992-93 ஆம் ஆண்டில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு கோடி ரூபாய் நிதியை, மாநில வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியிருக் கிறார்கள். ஆகவே, மாநிலத்தில் இருக்கிற அனைத்து மையங் களிலும், தேவையைக் கருத்தில் கொண்டு, இயன்ற அளவுக்கு பெரியகுளம் தொகுதியில் உள்ள சத்துணவு மையக் கட்டிடங் களைப் புதுப்பிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.